தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1969 மார்ச் 6

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

புயலால் சேதம்.

*186 வினா.— **திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1967 நவம்பர், டிசம்பர் மாதங்களில் புயல் மழையின் காரணமாக ஏற்பட்ட சேதாரத்தின் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மொத்த விரயம் ரூ.1,77,29,810 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், எந்தெந்த மாவட்டத்திலே எந்தெந்த பகுதியிலே அந்தச் சேதாரம் ஏற்பட்டது என்ற விவரத்தைக் கூற முடியுமா ? .

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: விவரமான அறிக்கையாக இருக்கிறது. சபைமுன் வைக்கவேண்டுமென்று கூறுகிறார்கள். அதை இப்போதே சொல்லவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், அதையும் சொல்லத் தயாராய் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் விவரமான அறிக்கை வைக்கிறேன் என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இங்கு ஒரு விவரமான அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இதை இப்பொழுது சொல்வதென்றால், கொஞ்சம் நேரம் ஆகும். பரவாயில்லையென்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதித்தால் சொல்கிறேன்.

திரு. ஆர். நாகசுந்தரம் : 1967 நவம்பரிலே, விவசாயத்திற்குப் பெரிதும் பயன்பட்டுவந்த வீடூர் அணைக்கட்டு பெரிதும் சேதப்பட்டுவிட்டது. அது இன்னும் சீர்படுத்தப்படவில்லை. அது எப்போது சீர்ப்படுத்தப்படும், அது விவசாயத்திற்கு எப்பொழுது பயன்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, consequent on the bad effects of cyclone and heavy rains in Madurantakam and other parts of the Chingleput district, what are the relief works that have been undertaken to rectify the damages caused by these floods and heavy rain?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: புயலின் விளைவாக ஏற்பாடுகள் செய்ததையொட்டி பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தென்னங்கன்றுகள் பயிரிடுவதற்காக இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றன

சேதாரம் அடைந்த வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு உதவி செய்யப்பட்டிருக்கிறது. உடைப்பு எடுத்த ஏரிகள் செப்பம் செய்யப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி இந்த மன்றத்திலே விவரமான அறிக்கை ஏற்கனவே வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : இராமநாதபுரம் ஜில்லாவிலே புயலால் பாதிக்கப்பட்ட பஞ்சாயத்து ரோட்டுகளுக்கு பணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எஸ்டிமேட்டைக் குறைத்துவிட்டதால் சரியாகப் பழுதுபார்க்கப்படவில்லை. கிராமங்களில் உள்ள சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அவைகளைச் சீர்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இராமநாதபுரத்திற்கு பெரும் அளவு பணம் செலவு செய்திருக்கிறார்கள். எந்த ரோட்டு அப்படி இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்யத் தயாராய் இருக்கிறது.

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: புயலினால் ஏற்பட்ட சேதாரத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உயிர் சேதாரம் ஏற்பட்டதா ? அப்படியென்றால் எவ்வளவு உயிர்களுக்குச் சேதாரம் ஏற்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 11 பேர்கள் இந்தப் புயலின் காரணமாக உயிர் இழந்தார்கள். செங்கல்பட்டு மாவட்டத்தில் 4 பேர்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் 5 பேர்கள், தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒருவர், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருவர் இந்தப் புயல் பெருமழை காரணமாக மரணம் அடைந்தனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு வருஷங்களுக்கு முன்னால் இதைப்பற்றிய விவரம் வந்துள்ளது.

திரு. கே. பி. எஸ். மணி : புயல் ஆண்டுதோறும் ஒவ்வொரு இடத்திலே அடித்துக்கொண்டிருக்கிறது. அதனால் மீனவர் சமூகத்தினர் கடற்கரை ஓரத்திலே இருப்பவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புகொடுப்பதற்குப்பழைய அரசாங்கத்திலிருந்து இன்றைய வரையும் எந்தவிதமான முறையும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: உரிய பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. திரு. மணி அவர்கள் சொன்னபடி ஆண்டுதோறும் புயல் அடித்தது. ஆனால் இந்த ஆண்டு புயல் அடிக்கவில்லை. புயலாக இல்லாமல் பல மாவட்டங்களில் இயற்கையின் கொடூரம் வறட்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதுபற்றிய அறிக்கை ஏற்கனவே இந்த அவையிலே படிக்கப்பட்டிருப்பதால், அதற்கு இப்போது போதுமான அவகாசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் ஒவ்வொரு மாவட்டத்திலும் சேதாரம் அடைந்தவர்களுக்கு எந்த அளவிற்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று கூறமுடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது சம்பந்தமாகப் பழைய புஸ்தகங்களைத் திருப்பிப் பார்த்துக் கொள்ளலாம். இது மிகவும் பழைய கேள்வி ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. வீடுகள் நாசம் அடைந்திருக்கின்றன. எவ்வளவு ஏரிகள் சேதாரம் அடைந்துள்ளன, எவ்வளவு சொத்து சேதாரம் என்பவற்றை எல்லாம் அதிலே பார்த்துக்கொள்ளலாம். மத்திய அரசிடம் கடன் வாங்கி அவையெல்லாம் முடிந்துவிட்ட விவகாரம். இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில் நாம் என்ன செய்திருக்கிறோம், நாட்டு மக்கள் எவ்வளவு தூரம் ஒத்துழைப்பார்கள் என்பது தான் இப்போது இருக்கிற கேள்வி. அந்தக் கேள்வி மிகவும் காலம் கடந்த கேள்வி.